SINGAPORE – CAMBRIDGE
General Certificate of Education Ordinary Level

# தமிழ்

தாள் 2

**1157/2**

**TAMIL**

Paper 2

**SPECIMEN PAPER**

*With effect from 2024 examination*

**1 hour 30 minutes**

Additional Materials: Answer Booklet

**தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்**

1 ஒவ்வொரு பிரிவின் தொடக்கத்திலும் உள்ள குறிப்புகளை நன்கு படித்துப் புரிந்துகொண்டு அவற்றின்படி வினாக்களுக்கு விடையெழுத வேண்டும்.

2 விடைகள் அனைத்தையும் கொடுக்கப்பட்டுள்ள விடைப்புத்தகத்தில் எழுத வேண்டும்.

3 பயன்படுத்தப்பட்ட அல்லது பயன்படுத்தப்படாத எந்தவொரு விடைப்புத்தகத்தையும் தேர்வு நடைபெறும் மண்டபத்திலிருந்தோ அறையிலிருந்தோ வெளியே எடுத்துச் செல்லக்கூடாது.

இவ்வினாத்தாள் 11 அச்சிடப்பட்ட பக்கங்களையும் 1 அச்சிடப்படாத பக்கத்தையும் கொண்டுள்ளது.

Singapore Examinations and Assessment Board

©MOE

## ‘அ’ பிரிவு

**A1 மரபுத்தொடர்களும் இணைமொழிகளும் (10 மதிப்பெண்கள்)**

பின்வரும் வாக்கியங்களில் ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கேற்ற மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து அவ்விடையின் எழுத்துக்குரிய வட்டத்தை விடைப்புத்தகத்தில் நிழலிடவும்.

**1** மக்கள் தம் பணிகளைத் துரிதமாகவும் சிறப்பாகவும் மேற்கொள்வதற்குத் தொழில்நுட்பம் _______________ அமைச்சர் தமது உரையில் குறிப்பிட்டார்.

**2** சாலையில் ஏற்பட்ட போக்குவரத்து நெரிசலை _______________ சமாளித்த போக்குவரத்து அதிகாரியைப் பொதுமக்கள் பாராட்டினார்கள்.

**3** மேலதிகாரிகள் ஊழியர்களிடம் _______________ நிறுவனத்தில் நிகழ்ந்த திருட்டுச் சம்பவம் குறித்த தகவல்களைச் சேகரிக்க முயன்றனர்.

**4** _______________ நிறைந்த நாட்டில் மக்கள் நிம்மதியின்றி வாழ்வதோடு தம் தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதில் சிரமத்தையும் எதிர்நோக்குகின்றனர்.

**5** குத்துச்சண்டையில் தன் திறமையை வெளிப்படுத்திய மோகன் அனைத்துலகப் போட்டியில் மற்ற வீரர்களை _______________ தயாரானான்.

| | |
|---|---|
| (A) இனிக்கப் பேசி | (B) கூச்சல் குழப்பம் |
| (C) போரும் பூசலும் | (D) ஒருகை பார்க்க |
| (E) கழித்துக் கட்ட | (F) கைகொடுப்பதாக |
| (G) சிட்டாய்ப் பறந்து | (H) பேச்சுக் கொடுத்து |
| (I) பம்பரமாகச் சுழன்று | (J) இடங்கொடுப்பதாக |

**A2** முன்னுணர்வுக் கருத்தறிதல் **(10 மதிப்பெண்கள்)**

பின்வரும் பனுவலில் கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கேற்ற சொற்கள் பனுவலின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கேற்ற மிகப் பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து அவ்விடையின் எழுத்துக்குரிய வட்டத்தை விடைப்புத்தகத்தில் நிழலிடவும்.

காலத்தின் மாற்றத்திற்கேற்ப மக்களது வாழ்க்கைத் தேவைகள் மாறுகின்றன. அவற்றுள் ஒன்றே உணவு தொடர்பான மாற்றங்களாகும். இக்காலத்தில் உணவுத் தயாரிப்பு முறைகளும் அவற்றை விற்பனை செய்யும் வழிமுறைகளும் மாற்றங்களுக்கு **(6)**___________ வருகின்றன. உணவுத்துறையைச் சேர்ந்தவர்கள் மக்களின் உணவுப் பழக்கவழக்கங்களை அறிந்து அவற்றுக்கேற்பத் தங்கள் வியாபார **(7)**___________ மாற்றங்கள் செய்து வருகின்றனர்.

இன்றைய பரபரப்பான வாழ்க்கைமுறையில் மக்கள் பல்வேறு அலுவல்களில் ஈடுபடுவதால் அவர்களுக்கு நேரத்தை மிச்சப்படுத்த வேண்டிய **(8)**___________ ஏற்பட்டுள்ளது. இத்தகைய சூழ்நிலையில் அவர்கள் தமது அலுவல்களுக்கிடையே எளிதாக உணவு வாங்கி விரைந்து உணவுண்ணும் நிலை வந்துவிட்டது. **(9)**___________ பலரும் தாம் இருக்கும் இடத்திற்கே உணவை விநியோகம் செய்பவர்களது சேவையை நாடுகின்றனர். இந்த விநியோக முறை உணவகங்களுக்கு நேரில் செல்ல இயலாதோருக்குப் பயனளிப்பதுடன் உணவகங்களில் கூட்டத்தை **(10)**___________ உதவுகின்றது. மேலும், இந்த உணவு விநியோக முறை பலருக்கும் வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தித் தந்துள்ளது.

| | | | |
|---|---|---|---|
| (A) | அதற்கு | (B) | அதனால் |
| (C) | உள்ளாகி | (D) | அவசியம் |
| (E) | இடர்ப்பாடு | (F) | உட்படுத்தி |
| (G) | உத்திகளில் | (H) | தவிர்க்கவும் |
| (I) | சிந்தனைகளில் | (J) | கட்டுப்படுத்தவும் |

(அடுத்த பக்கம் பார்க்கவும்)

## ‘ஆ’ பிரிவு

**B3 தெரிவுவிடைக் கருத்தறிதல் (10 மதிப்பெண்கள்)**

பின்வரும் பனுவல்களைக் கருத்தூன்றிப் படித்து அவற்றிற்குரிய வினாக்களுக்கு விடையளிக்கவும். வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் நான்கு தெரிவுகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து அவ்விடையின் எழுத்துக்குரிய வட்டத்தை விடைப்புத்தகத்தில் நிழலிடவும்.

பனுவல் 1

நன்னெறிக் கதைகள் 90

### 7 கல்வியின் அருமை

தாயார் ஒருவர் துணிகளைத் தைத்துப் பிழைப்பு நடத்தி வந்தார். ஒருநாள் அவரது மகன், “அம்மா, பள்ளிக்குச் செல்ல எனக்கு விருப்பமில்லை. அதனால், நாளைமுதல் நீங்கள் தைக்கும் துணிகளை நான் விற்று வருகிறேன்,’’ என்றான். இதைக் கேட்ட தாயார் தாம் தைத்துக்கொண்டிருந்த விலையுயர்ந்த ஆடையைக் கிழித்து எறிந்தார். மகன் தாயைப் பதற்றத்துடன் நோக்கினான். **“உன் முடிவைவிடவா இது பெரிய அழிவு?**’’ என்றார் தாயார். தன் தாயை அணைத்துக்கொண்டு அழுத மகன் பள்ளிக்குச் செல்ல ஒப்புக்கொண்டான்.

நன்னெறிக் கதைகள் 91

அந்தத் தாயார் தம் பிள்ளைக்குக் கல்வியின் அருமையை உணர்த்திய விதம் ஆழமானது. இவரைப் போலவே பெற்றோர் அனைவரும் தம் பிள்ளைகள் கல்வி கற்று உயர்வடைய வேண்டும் என்று விரும்புகின்றனர். ஆனால், சிலர் தம் பிள்ளைகளின் திறன், விருப்பம் முதலியவற்றைக் கவனத்திற்கொள்ளாது தாங்கள் கூறும் துறையில் ஈடுபடுமாறு தம் பிள்ளைகளை வற்புறுத்துகின்றனர். இதனால், பிள்ளைகள் மனவுளைச்சலால் பாதிப்புறுகின்றனர். எனவே, பெற்றோர் தம் பிள்ளைகளின் மனநிலையை உணர்ந்து அவர்களுக்கு ஆதரவு அளித்தால் பிள்ளைகள் கல்வியின் பயனை முழுமையாகப் பெற இயலும்.

முற்றும்

<u>வினாக்கள்</u>

**11** ‘உன் முடிவைவிடவா இது பெரிய அழிவு?’ என்னும் வாக்கியத்தில் ‘முடிவை’ என்பது எதைக் குறிக்கிறது?

(A) மகன் தனக்கு உதவ நினைப்பதை

(B) மகன் பள்ளிக்குச் செல்ல விரும்பாததை

(C) மகன் தன் எதிர்காலத்தைப் பாழாக்குவதை

(D) மகன் துணி விற்பனையைத் தொடங்க எண்ணுவதை

**12** கல்வியின் முழுப் பயனைப் பிள்ளைகளால் எப்போது பெற இயலும்?

(A) பெற்றோர் தம் பிள்ளைகளுக்கு எவ்வித மனவுளைச்சலும் தராதபோது

(B) பெற்றோர் தம் பிள்ளைகள் கல்வியால் உயர்வடைய வேண்டும் என்று எண்ணும்போது

(C) பெற்றோர் தமக்கு விருப்பமான துறையில் பிள்ளைகள் கல்வி பயில வாய்ப்பளிக்கும்போது

(D) பெற்றோர் தம் பிள்ளைகளின் திறனறிந்து அவர்களுக்கு விருப்பமான துறையில் கல்வி பயில ஊக்குவிக்கும்போது

(அடுத்த பக்கம் பார்க்கவும்)

பனுவல் 2

## கணினி விளையாட்டுகள்

மாலினி: வணக்கம் குமாரி இசபெல்லா கிரானிக். ‘அறிவியல் சுடர்’ மின்னிதழுக்குப் பேட்டி கொடுக்கச் சம்மதித்ததற்கு நன்றி. ஓர் உளவியலாளராகப் பணியாற்றி வரும் தாங்கள் கணினி விளையாட்டுகளில் ஈடுபடும் சிறுவர்களைக்கொண்டு ஆய்வு செய்துள்ளீர்கள். அதைப் பற்றி எங்களோடு பகிர்ந்துகொள்ள முடியுமா?

கிரானிக்: தாராளமாக மாலினி! நான் மேற்கொண்ட ஆய்வில் பங்கேற்ற சிறுவர்களிடத்தில் கணினி விளையாட்டுகளில் ஈடுபடுவதால் சில நல்ல பண்புகளும் திறன்களும் வளர்ந்திருப்பதைக் கண்டறிந்துள்ளேன். இத்தகைய சிறுவர்கள் புதிய சூழ்நிலைக்கு ஏற்றவாறு தங்கள் மனநிலையை மாற்றிக்கொள்கிறார்கள். மேலும், இவர்கள் இவ்விளையாட்டுகளின்வழிச் சந்திக்கும் புதியவர்களுடன் விரைவில் நட்புக்கொள்கிறார்கள். முக்கியமாக, இச்சிறுவர்கள் தங்களுக்குப் புதிதாகக் கிடைக்கும் தகவல்களை எளிதாகப் புரிந்துகொள்கிறார்கள்.

மாலினி: கணினி விளையாட்டுகளால் பல நன்மைகள் கிடைக்கின்றன என்பதை இன்று அறிந்துகொண்டேன். இன்றைய சிறுவர்கள் பலரும் ஒரு விளையாட்டில் ஈடுபடும்போது அது தமக்கு வெற்றியைத் தராவிட்டால் அதிலிருந்து விலகிக்கொள்ளும் போக்கினைக் கொண்டிருக்கிறார்கள். கணினி விளையாட்டுகளில் ஈடுபடும் சிறுவர்களின் மனப்போக்கு எவ்வாறு உள்ளது?

கிரானிக்: இச்சிறுவர்கள் **இரண்டில் ஒன்று பார்த்துவிடலாம்** என்னும் தன்னம்பிக்கையுடன் விளையாடுகின்றனர், மாலினி. மேலும், சிலவகையான கணினி விளையாட்டுகளில் எதிர்ப்படும் சவால்களை எதிர்கொள்வதற்குத் தம் திறன்களை ஒன்றிணைத்துச் சிறப்பாகச் செயற்படுகின்றனர். இருப்பினும், கணினி விளையாட்டுகள் விளையாடும் சிறுவர்கள் அவற்றிற்கு அடிமையாகாமல் இருக்க வேண்டும். அளவுக்கு மீறினால் அமுதமும் நஞ்சு என்பதை இவர்கள் உணர்ந்து செயற்பட்டால் நல்லது.

மாலினி: நன்றி குமாரி கிரானிக்.

<u>வினாக்கள்</u>

**13** கணினி விளையாட்டுகளை விளையாடும் ஒருவர் பெறக்கூடிய முக்கியப் பயன் என்ன?

(A) புதிய நண்பர்களைப் பெறுவது

(B) கணினித் திறன்களை வளர்த்துக்கொள்வது

(C) புதிய தகவல்களை எளிதாகப் புரிந்துகொள்வது

(D) மாறும் சூழலுக்கு ஏற்ற மனப்போக்கினைப் பெற்றிருப்பது

**14** ‘இரண்டில் ஒன்று பார்த்துவிடலாம்’ என்னும் தொடர் உணர்த்தும் கருத்து யாது?

(A) வெற்றி கிடைக்கும்வரை விளையாட வேண்டும்

(B) முயற்சியோடு தொடர்ந்து விளையாட வேண்டும்

(C) முடிவை எண்ணிப்பார்க்காமல் விளையாட வேண்டும்

(D) போட்டியிடுபவரை வீழ்த்தும்வரை விளையாட வேண்டும்

**15** கணினி விளையாட்டுகள் விளையாடுவது குறித்துக் குமாரி கிரானிக் உணர்த்த விரும்பும் கருத்து யாது?

(A) இவ்விளையாட்டுகளை அளவறிந்து விளையாடினால் நன்மை பெறலாம்

(B) இவ்விளையாட்டுகளால் ஒருவருடைய திறன்கள் ஒன்றிணைக்கப்படுகின்றன

(C) இவ்விளையாட்டுகளுக்குச் சிறுவர்கள் அடிமையாகாமல் இருப்பது அவசியம்

(D) இவ்விளையாட்டுகளால் விளையும் நன்மைகளை மட்டும் கருத்திற்கொள்ள வேண்டும்

(அடுத்த பக்கம் பார்க்கவும்)

**B4** பிழை திருத்தம் **(10 மதிப்பெண்கள்)**

பின்வரும் பனுவலின் இடப்பக்கத்தில் வினாக்களின் எண்கள் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு வினா எண்ணின் எதிரிலும் உள்ள வரியில் பிழையான சொல் ஒன்று உள்ளது. அப்பிழையான சொல்லைத் திருத்திச் சரியான சொல்லை விடைப்புத்தகத்தில் எழுதவும்.

| | |
|---|---|
| | சிங்கப்பூர் பலரும் விரும்பும் பூங்கா நகரமாகத் திகழ்கிறது. இங்குப் பசுமையைப் |
| | பேணும் திட்டங்களுக்குத் தொடர்ந்து முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. |
| **(16)** | அண்மைக் காலமாக இங்குள்ள கட்டடங்களின் மேற்கூரைகளில் பசுமையாகத் |
| | தோட்டங்களை அமைத்து அவற்றைப் பேணும் போக்கு அதிகரித்து வருகிறது. |
| | பல்வேறு நன்மைகளை நல்கி வரும் இந்த மேற்கூரைத் தோட்டங்கள் |
| **(17)** | தொழில்நுட்பத்தின் துணையோடு மக்களின் தேவைக்கேற்ப உருவாகின்றன. |
| **(18)** | வெப்பநிலையைக் குறைப்பதற்கும் சுற்றுப்புறத்தின் அழகு சேர்ப்பதற்கும் |
| | மேற்கூரைத் தோட்டங்கள் முக்கியப் பங்காற்றுகின்றன. இவை மக்கள் |
| | மகிழ்ச்சியுடன் பொழுதுபோக்கவும் ஆரோக்கியமாக வாழவும் உதவுகின்றன. |
| **(19)** | அதனால், இவற்றைப் பயன்படுத்துபவர்களுக்கு உரிய பாதுகாப்பை வழங்கவும் |
| | நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேற்கூரைத் தோட்டங்களில் |
| **(20)** | தூய்மையான காற்றைச் சுவாசித்த மக்கள் ஒருவரோடு ஒருவர் அளவளாவும் |
| | வாய்ப்பினையும் பெறுகின்றனர். இதனால், சமூக நல்லிணக்கம் மேம்படுகிறது. |

## ‘இ’ பிரிவு

**C5 சுயவிடைக் கருத்தறிதல் (30 மதிப்பெண்கள்)**

பின்வரும் பனுவலைக் கருத்தூன்றிப் படித்து அதையொட்டிய வினாக்களுக்கு உன் சொந்த நடையில் விடைப்புத்தகத்தில் விடை எழுதவும்.

1 மாணவன் ஒருவன் தேசிய நிலையிலான ஓட்டப்பந்தயப் போட்டியில் முதன்முறையாகக் கலந்துகொண்டு இறுதி நிலையை அடைந்தான். அவன் நிலையில் வேறொருவர் இருந்திருப்பின் அவர் வருத்தத்தில் ஆழ்ந்திருக்கக்கூடும். ஆனால், அந்த மாணவனோ அப்போட்டியை முடிப்பதற்கு வழக்கத்தைவிடத் தான் குறைவான நேரத்தை எடுத்துக்கொண்டதை எண்ணித் தன்னைத் தானே தேற்றிக்கொண்டான். அவனது மனவலிமை ஒருநாள் அவனை வெகு உயரத்திற்கு இட்டுச் செல்லும் என்பது உறுதி.

2 மனவலிமையுள்ள ஒருவராலேயே இக்கட்டான சூழ்நிலைகளை எதிர்கொண்டு சமாளிக்க இயலும். அனைவரிடமும் மனவலிமை ஓரளவு இருக்கவே செய்கிறது. ஆனால், அதை மேம்படுத்திக்கொள்ளும் முயற்சிகளில் ஒருவர் ஈடுபடாவிட்டால் அவர் தம் வாழ்வில் ஏற்படும் விரும்பத்தகாத நிகழ்வுகளை எதிர்கொள்வதற்குரிய ஆற்றலின்றித் துவண்டு போவார். மேலும், அவர் அச்சூழல்களில் தமது உணர்வுகளைச் சரியான வழியில் வெளிப்படுத்தும் ஆற்றலையும் பெற்றிருக்கமாட்டார். அதே வேளையில் மனவலிமையுள்ள ஒருவர் எதிர்பாராதவிதமாகத் தொடர்ந்து தோல்வியுறும்போது அவர் மனத்தில் எதிர்மறையான எண்ணங்கள் தோன்றக்கூடும். இதனால், அவர் தம் தன்னம்பிக்கையை இழக்க நேரிடும்.

3 மனிதர்களுள் சிலர் தமக்குச் சிறு துன்பம் **<u>நேர்ந்தாலும்</u>** கலங்கிவிடுகின்றனர். ஆனால், மனவலிமையுள்ள தலைவர்கள் தினமும் பற்பல சிக்கல்களைச் சந்தித்துத் தீர்வு காண்கின்றனர். சாதாரண மனிதர்களைப்போல் அவர்களும் கடந்த காலத்தில் சில தவறுகள் செய்திருக்கலாம். ஆனால், அத்தலைவர்கள் ஒருமுறை தவறு செய்யும்போதே அதை ஆராய்ந்து அத்தவற்றைத் திருத்திக்கொள்கின்றனர். அதன் பின்னர், அத்தவறு மீண்டும் நேராதவாறு மனவலிமையோடு சரியான வழிமுறைகளைக் **<u>கடைப்பிடிக்கின்றனர்</u>**.

4 மனவலிமைக்கு எதிர்பாராத நல்ல நிகழ்வுகளை ஏற்படுத்தும் ஆற்றலும் உண்டு. இதற்கு முன்னுதாரணமாகத் திகழ்பவர் திருமதி சுதா சந்திரன் ஆவார். சிறந்த பரதநாட்டியக் கலைஞராகத் திகழ்ந்த அவர் ஒரு விபத்தின் காரணமாகத் தம் வலக் காலை இழந்தார். அவருடைய நடனத்திறமையே முற்றுப்பெற்றுவிடும் எனப் பலரும் எதிர்பார்த்தனர். ஆனால், அவரோ செயற்கைக் காலைப் பொருத்திக்கொண்டு முன்பு இருந்ததைக் காட்டிலும் மிகுந்த ஊக்கத்துடன் நடனப்பயிற்சியில் ஈடுபட்டார். இந்தியா மட்டுமன்றி உலக நாடுகள் பலவற்றிலும் தம் நடன நிகழ்ச்சிகளைப் படைத்துச் **சோதனையைச் சாதனையாக மாற்றினார்**.

5 ஒருவன் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கலாம். அதோடு, மனவலிமையும் இருந்தால்தான் அவனால் தான் மேற்கொள்ளும் செயல்களைச் சிறப்பாகச்


(அடுத்த பக்கம் பார்க்கவும்)

செய்துமுடிக்க இயலும் எனத் திருவள்ளுவர் முதலான அறிஞர்கள் வலியுறுத்துகின்றனர். அவ்வாறு இல்லாவிட்டால் அவன் தான் தொடங்கிய செயலை முடிப்பதில் சிரமத்தை எதிர்கொள்வான். அதனால்தான், திருவள்ளுவர் மனிதனுக்கு மனவலிமையே **<u>நிலையானது</u>** என்கிறார். மேலும், மனவலிமையுள்ள ஒருவனாலேயே தனக்குத் தேவையானவற்றைப் பெற இயலும் என்றும் அவன் அனைவரின் மதிப்பிற்கும் உரியவனாவான் என்றும் உரைக்கிறார்.

<u>வினாக்கள்</u>

**21** மாணவனுக்கும் மற்றொருவருக்கும் இடையே உள்ள வேறுபாடு யாது? அதற்குக் காரணம் என்ன? (5 மதிப்பெண்கள்)

**22** மேற்கண்ட பனுவலைப் படித்துவிட்டுக் கோமதியும் முரளியும் கருத்துரைக்கின்றனர்.




(அ) கோமதியின் கருத்துக்கு ஆதரவாக 2-ஆம் பத்தியிலிருந்து தக்க சான்றுகளைக் கண்டறிந்து எழுதவும். (4 மதிப்பெண்கள்)

(ஆ) கோமதியின் கருத்தை முரளி மறுப்பதற்கான காரணங்களை 2-ஆம் பத்தியை அடிப்படையாகக்கொண்டு எழுதவும். (2 மதிப்பெண்கள்)

**23** தலைவர்களுக்கு மனவலிமை எவ்வகையில் துணைபுரிகிறது? (4 மதிப்பெண்கள்)

**24** திருமதி சுதா சந்திரன் 'சோதனையைச் சாதனையாக மாற்றினார்' என்று கூறுவது எவ்வாறு பொருந்தும்? (5 மதிப்பெண்கள்)

**25** திருவள்ளுவர் மனவலிமையின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவது ஏன்? (5 மதிப்பெண்கள்)

**26** 1-ஆம் பத்தியில் 'திண்ணம்' என்னும் பொருளை உணர்த்தும் சொல்லைக் கண்டறிந்து எழுதவும். (1 மதிப்பெண்)

**27** 2-ஆம் பத்தியில் துன்பத்திலுள்ள ஒருவரின் நிலையை எந்தச் சொல் உணர்த்துகிறது என்பதைக் கண்டறிந்து எழுதவும். (1 மதிப்பெண்)

பின்வரும் சொற்கள் பனுவலில் இடம்பெற்றுள்ளன. அவை உணர்த்தும் பொருளை விடைப்புத்தகத்தில் எழுதவும்.

**28** நேர்ந்தாலும் (1 மதிப்பெண்)

**29** கடைப்பிடிக்கின்றனர் (1 மதிப்பெண்)

**30** நிலையானது (1 மதிப்பெண்)

முற்றும்

**BLANK PAGE**

*Copyright Acknowledgements:*

The Singapore Examinations and Assessment Board has made every effort to trace copyright holders, but if we have inadvertently overlooked any, we will be pleased to make the necessary arrangements at the first opportunity.